தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் பயிர் ஒளிச்சேர்க்கை பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் பயிர் வினையியல் துறை நடத்தும் இரண்டு நாள் பயிற்சி "பயிரில் ஒளிச்சேர்க்கை மற்றும் நீர் பயன்பாட்டு திறனில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள்" என்ற தலைப்பில் மார்ச் 21-22 ஆகிய தேதிகளில் நடைபெற்று வருகிறது.

முனைவர் பி.ஜெயக்குமார், பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் வினையியல் துறை, அறிமுக உரை வழங்கினார். அவர் ஒளிச்சேர்க்கை மற்றும் நீர் பயன்பாட்டுத் திறன்களைக் கொண்டு பயிர்களில் உலர்எடை (biomass) மேம்படுத்தும் முறையை எடுத்துரைத்தார். மேலும் அவர் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி ஒளிச்சேர்க்கையை அளவிடும் வழிமுறைகளைக் கூறினார்.

முனைவர் ஆர். சாந்தி, இயக்குநர், இயற்கைவள மேலாண்மை, தொடக்க உரையில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பில் பயிர் வினையியல் ஆராய்ச்சியாளர்களின் பங்கீட்டை கூறினார். இப்பயிற்சியின் மூலம் அவர் பயிற்சியாளர்களை பல்துறை ஆராய்ச்சி திட்டங்களைத் தொடங்க ஊக்குவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டது.

உழவியல் துறை மற்றும் வேளாண் காலநிலை ஆய்வு மையத்தின் பேராசிரியர்கள் மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டு பயிற்சியினை சிறப்பித்தனர். மேலும் இப்பயிற்சியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தினை சார்ந்த வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர் டி. விஜயலட்சுமி, இணை பேராசிரியர், பயிர் வினையியல் துறை, வரவேற்புரை ஆற்றினார். முனைவர். எஸ். வின்சன்ட, பேராசிரியர், பயிர் வினையியல் துறை, நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்